242

போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்

Edito[r &] Pub[lisher] ... A. Lourduswami, B.A., L.T.
...raining School, Trichinopoly.

SL
ணை211, N11PP
N47, 37·9·
210016

5 மார்ச்சு 1947 மலர் 9

...முறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

வருஷ சந்தா ரூபாய் 1. தனிப்பிரதி அணா 2.

போதனா விஷயப் பூங்கொத்து

கொத்து 37] 15 மார்ச்சு 1947 [மலர் 9

பத்திராதிபர் குறிப்புகள்

பழையமாணவர்தினக் கொண்டாட்டம் :—ஏற்கனவே அறிவித்துள்ளபடி ஷை கொண்டாட்டம் இம்மாதம் 22-ம் ௳ (22-3-'47) சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். அவ்வமயம் வழக்கம்போல் "சங்கீதப்போட்டி" நடத்தப்படும். அதில் பழைய, புது மாணவர்கள் கலந்துகொள்ளலாம். ஆனால் ஏற்கனவே பாட்டுப்போட்டியில் பரிசு பெற்றவர்கள் மீண்டும் இவ்வருஷப் போட்டியில் பங்கெடுக்கக்கூடாது. இவ்வருஷப் போட்டியில் முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு **வெள்ளிப்பதக்கப் பரிசு** அளிக்கப்படும்.

* * * * *

New Admissions :—வழக்கம்போல் அடுத்த ஜூலை மாதம், நம் போதனாமுறைப் பாடசாலையில், **ஸெக்கண்டரி கிரேடிலும், எலிமென்டரி கிரேடிலும்** சேர்ந்து படிக்க, புது மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப் படுவார்கள். சேர விரும்புகிறவர்கள், இப்பாடசாலையின் அப்ளிகேஷன் பாரம் (Application Form) வாங்கி பூர்த்திசெய்து, அதை இப்பாடசாலைத் தலைமை ஆசிரியருக்கு அடுத்த மே-மீ 31-ம் தேதிக்குள் அனுப்பி விடவேண்டும். Form ஒன்றுக்கு 2 அணா வீதம் தபால் ஸ்டாம்பு அனுப்பி தேவையான பாரங்களைப் பெற்றுக்கொள்ளத்தகும்.

மற்ற விவரங்கள் அடுத்தமாத "பூங்கொத்தில்" தெரிவிக்கப்படும்.

* * * * *

வெள்ளிப்பதக்கப் பரிசு.—இவ்வருஷம் நடைபெறும் T. S. L. C. பரீட்சை எழுதி, தேர்ச்சியில் முதன்மையாக மார்க்கு வாங்கும் **ஸெக்கண்டரி கிரேடு** மாணவர் ஒருவருக்கும், அவ்வாறே முதன்மை மார்க்கு வாங்கும் **எலிமெண்டரி கிரேடு** மாணவர் ஒருவருக்கும் வழக்கம்போல் இப்பாடசாலையின் பெயரால் "வெள்ளிப்பதக்கப் பரிசு" அளிக்கப்படும் என்பதை இதன்மூலம் அறிக.

* * * * *

ஆசிரியர் சங்கம், பெற்றோர் சங்கம் முதலிய சங்க நிகழ்ச்சிகளைக் குறித்து, பற்பல செய்திகள் கிடைத்துள்ளன. அவற்றையெல்லாம் இம்மாதத்தில் பிரசுரிக்க இயலாமல் இருப்பதற்கு வருந்துகின்றோம். அடுத்தமாத இதழில் அவற்றைப் பிரசுரிக்க எம்மாலானமட்டும் முயற்சிப்போம். எனவே செய்தியனுப்பியுள்ளவர்கள் தயைகூர்ந்து மன்னிப்பார்களாக. [ப-ர்.]

[Page 70 of Fort St. George Gazette Part I-B dated 11th Feb. 1947.]

MADRAS

Public Examination at the end of the VIII Standard.

The following revised rules for the award of Elementary School-Leaving Certificates at the end of the VIII Standard Public Examination are notified :—

1. Elementary School-Leaving Certificates will be awarded to pupils of recognized Higher Elementary Schools on their completing a course of instruction in an Higher Elementary School up to and inclusive of Standard VIII and passing the VIII Standard Public Examination conducted by the Commissioner for Government Examinations.

2. The examination will be conducted once a year, in the second week of April (the actual date being fixed every year) at the select centres under arrangements made by the Commissioner for Government Examinations, and notified by him through the officers inspecting Elementary Schools.

3. Applications for admission to the VIII Standard Public Examination should be submitted by head teachers of recognized Higher Elementary Schools on behalf of the pupils of the respective schools in the month of January preceding the month of the examination in the form prescribed.

4. An examination fee of rupees two (Rs. 2) should be remitted along with the application on behalf of every pupil applying for the examination in all the four subjects including English (optional), or even for three subjects, and a fee of annas eight (8 annas) alone shall be remitted by each candidate who desires to appear in English only.

5. The examination will be held in the following subjects :—

(1) Language, (2) Elementary Mathematics, (3) History and Geography including Civics and (4) English (optional).

Candidates will be examined in the syllabus prescribed for the Higher Elementary Course by the Director of Public Instruction in these subjects in general and with reference to text-books published or prescribed by the Director of Public Instruction in the Languages of the Presidency for (1) Language and (2) English (optional). In the subject,

viz., History and Geography including Civics, the candidates will be examined only in the portions taught in Standards VII and VIII.

Each of the above subjects will be examined in a question paper of two hours duration and of a maximum of 100 marks.

Candidates who obtain a minimum of 35 marks in Language and English (optional) and 30 marks in each of the other two papers will be declared to have passed the examination.

6. The results of the examination will be notified in the Fort St. George Gazette by the Secretary to the Commissioner for Government Examinations, Madras.

7. Printed certificates in the prescribed form will be issued by the Secretary to the Commissioner for Government Examinations, Madras, to the candidates who are thus declared to have passed the examination. The certificates of successful candidates will be issued through the head teachers of the schools concerned.

8. No candidate who has not attended at least 75 per cent of the working days in the school year in Standard VIII up to the 31st March inclusive, will be issued a certificate. No candidate who has not studied English during the course of instruction at school will be permitted to appear for the examination in English. Every head teacher shall submit to the inspecting officer of the school, on or before 10th April, a certificate in the form prescribed with reference to the pupils who have attended school for the prescribed minimum number of working days and list of pupils who have not so attended among those on whose behalf applications for the examination have been submitted.

(Will be continued.)

21606

விடுகதை விடைகள்

[கொத்து 37, மலர் 8, பக்கம் 154-ன் விடுகதைகள்]

விடைகள் :—(1) பனைமரம். (2) பஞ்சு. (3) குடை. (4) உப்பு; பருத்தி; எருமுட்டை.

OFFICE ... OF BOOKS
28 APR 1941
MADRAS

பாடக்குறிப்பு

[A. Savarimuthu]

பாடம்: பூகோளம். **பாகம்:** எங்கள் ஊர் மார்க்கெட்.

வகுப்பு: 2-வது வகுப்பு.

நோக்கம்: திருச்சினுப்பள்ளி மார்க்கெட்டைப்பற்றிக் கற்பித்தல்.

உபகரணம்: 1. திருச்சியின் தரைப்படம். அதில் மார்க்கெட் உள்ள இடத்தைக் குறித்தல். 2. மார்க்கெட்டைத் தெளிவாக விளக்கும் மற்ெருரு படம்.

முன்னுரை: துணி எந்தக் கடையில் விற்கும்? (ஜவுளிக்கடையில் என்பதைப் பிள்ளைகளிடமிருந்து வருவித்தல்) மரம் எந்தக்கடையில் விற்கும்? இரும்பு எந்தக் கடையில் விற்கும்? வெண்கலப் பாத்திரம் எந்தக் கடையில் விற்கும்? நாம் என்னென்ன காய்கறிகளைச் சமையலுக்கு உபயோகிக்கிறோம்? இவற்றை உங்கள் தாய்மார்கள் எங்கிருந்து வாங்குகின்றனர்? (பிள்ளைகளிடமிருந்து இக்கேள்விமூலம் மார்க்கெட் என்பதை வருவித்தல்) இப்போது அந்த மார்க்கெட்டைப்பற்றிப் படிப்போம்.

விஷயம்	முறை
புது அறிவு:	
மார்க்கெட் நாள்தோறுங் கூடுவது. சந்தை வாரத்துக்கு ஒருமுறை கூடுவது.	மார்க்கெட்டுக்குஞ் சந்தைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குதல்.
ஆட்டுச்சந்தை மாட்டுச்சந்தை பூச்சந்தை.	ஆடு விற்கும் சந்தைக்கு என்ன பெயர்? மாடு விற்கும் சந்தைக்கு என்ன பெயர்? பூ விற்கும் சந்தைக்கு என்ன பெயர்?
மார்க்கெட்டில் ஒருபுறம் கறிக் கடை—இன்னொருபக்கம் காய்கறிக் கடை — இன்னொருபக்கம் துணிக் கடை—இன்னொருபக்கம் பாத்திரக் கடை.	இதைச் சயிக்கினையோடும் தொனிமாற்றத்தோடுங் கற்பித்தல். மார்க்கெட்டில் உள்ள சந்தடியைப் பற்றியும் ஆச்சரியம் உண்டாக்கும் வகையில் கற்பித்தல்.
அங்கு இருக்கும் பொருள்கள்	
1. **தானியவகை:** நெல், கம்பு, கேழ்வரகு, சோளம்.	இதைப் பிள்ளைகளிடமிருந்து வருவித்தல்.
2. **காய்கறிவகைகள்:** கத்தரிக்காய், புடலங்காய், வெண்டைக்காய், பூசனிக்காய்.	இதையும் பிள்ளைகளிடமிருந்து வருவித்தல்.

விஷயம்	முறை
3. **பழவகைகள்:** வாழைப்பழம், மாம்பழம், ஆரஞ்சிப்பழம், கொய்யாப் பழம்.	பிள்ளைகளிடமிருந்து வருவித்தல்.
4. **பாத்திர வகைகள்:** மண் பானைகள், சட்டி, கோப்பை, தம்ளர், வெண்கலப் பாத்திரம்.	பிள்ளைகளின் அநுபவத்திலிருந்து வருவித்தல்.
மார்க்கெட்டுக்குச் சாமான்கள் வரும் வகை:	
1. தலையில் தூக்கிக்கொண்டு வருதல்.	பள்ளிக்கூடத்திற்குப் பிள்ளைகள் எவ்விதமாகவெல்லாம் வருகிறார்கள்? இக்கேள்விமூலம், சாமான்கள் வரும் விதத்தை விளக்குதல்.
2. சைகிள்மூலங் கொண்டுவருதல்.	
3. மாட்டுவண்டியின்மூலம்.	
4. மோட்டார் லாரிகள்மூலம்.	
5. ரயில்மூலம்.	
மார்க்கெட்டுக்கு வரும் பொருள்கள் எங்கெங்கிருந்து வருகின்றன?	ஆரம்ப அறிவுமட்டும் ஏற்படுத்துதல்.
I. **திருச்சி ஜில்லாவிலிருந்து:** 1. நெல்.	நமது ஜில்லாவில் என்ன நதி பாய்கிறது? நதி உள்ள இடத்தில் எது அதிகம் விளையும்?
2. வாழை—இலை, பூ, தண்டு காய், பழம்.	வாழையிலிருந்து என்ன கிடைக்கின்றன?
3. வெற்றிலை, அவத்திக்கீரை, வாழை.	வெற்றிலை எங்கு பயிராகிறது? கொடிக்காலில் இன்னும் என்ன விளையும்?
II. **தஞ்சாவூரிலிருந்து:** நெல், முந்திரிப்பருப்பு.	கூடுமானால் பிள்ளைகளிடமிருந்து வரவழைத்தல்.
III. **புதுக்கோட்டையிலிருந்து:** வறண்ட பிரதேசம்—கம்பு, சோளம், வரகு.	வறண்ட பிரதேசத்தில் என்னென்ன விளையும்?
கொடைக்கானலிலிருந்து — பழவகைகள் — சாத்துக்குடி ஆரஞ்சு. சிறுமலையிலிருந்து — (திண்டுக்கல்) மலைப்பழம்.	இதைப் பிள்ளைகளிடமிருந்து வருவிக்கலாம்.

திருப்புதல் : சந்தைக்கும் மார்க்கெட்டுக்குமுள்ள வித்தியாசம் என்ன? மார்க்கெட்டில் என்னென்ன பொருள்கள் இருக்கின்றன? மார்க்கெட்டினுல் என்ன பிரயோஜனம்?

பயிற்சி : சரியா? தவறு?

1. சந்தை வாரத்துக்கு ஒருமுறை கூடுகிறது.
2. மார்க்கெட் வாரத்துக்கு ஒருமுறை கூடுகிறது.
3. கொடிக்காலில் கம்பு விளைகிறது.
4. மார்க்கெட்டில் ஒரு வியாபாரிதான் வியாபாரஞ் செய்கிறுன்.

II. கீழ்க்கண்ட பொருள்கள் கொடுக்கப்பட்டுள்ள எந்தெந்த இடத்திலிருந்து வருகின்றன என்று குறிக்க :—

1. தஞ்சாவூர்	1. கம்பு
2. சாத்துக்குடி	2. வெற்றிலை
3. சிறுமலை	3. முந்திரிப்பருப்பு
4. திருச்சி	4. ஆரஞ்சி
5. புதுக்கோட்டை.	5. வாழைப்பழம்.

III. கோடிட்ட இடத்தைப் பூர்த்திசெய்க :—

1. கொடிக்காலில் ——யும் பயிராகிறது.
2. சோளம் ——யில் விளைகிறது.
3. மார்க்கெட் ——களில் உள்ளன. (பட்டணங்களில்)
4. பூ விற்கும் சந்தைக்கு —— என்று பெயர்.

தேவை

போதனுமுறை பயின்ற இரண்டு ஹையர் கிரேடு உபாத்தியாயர்களும், ஒரு உபாத்தினியும் தேவை. விபரங்களுக்கு உடனே கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

REV. FR. A. MARIA AMBROSE,
Catholic Mission, Kodiveri P.O.,
(*Via*) Erode-Gobi.

நான் கண்ட மேட்டூர் அணை

[P. Rathnam]

மேட்டூர் அணை தென்னிந்தியாவில் உள்ள மிகப்பெரிய அணைக்கட்டு. இது சென்னை மாகாணத்தில் உள்ள சேலம் ஜில்லாவில் சேலத்திற்குத் தென்மேற்கே சுமார் 30 மைல் தூரத்தில் உள்ளது. வடக்கிலிருந்து வரும் காவிரி ஆற்றைத்தடுத்து இவ்வணை கட்டப்பட்டிருக்கிறது. இவ்வணை 1925-ம் வருடம் ஆரம்பித்து 1934-ல் முடிவடைந்தது.

அணை கிழக்குமேற்காக 1 மைல் 20 அடி நீளம் உள்ளது. உயரம் சுமார் 170 அடி. அணையின் அடி அகலம் 171 அடி. மேல் அகலம் 20 அடி. இவ்வணையைக் கட்டிமுடிக்கச் சுமார் 9 வருடங்களாயின. இவ்வணையானது 2 லட்சம் டன் சிமெண்டினால் கட்டப்பட்டது. இதற்கான மொத்தச்சிலவு ரூ. 4 கோடியே 80 லட்சமாகும். இது பல திறமைவாய்ந்த என்ஜினியர்களால் கட்டப்பட்டது. இவ்விடத்தில் அணைக்கு இரண்டு ஓரங்களிலும் உள்ள இரண்டு குன்றுகளின் உதவியே இவ்வணையைக் கட்டிமுடிக்க இலகுவாயிருந்தது. இவ்விரு குன்றுகளும் தண்ணீரைக் கிழக்குமேற்கில் பரவவிடாமல் காக்கின்றன. இப்படி இருந்தும் தண்ணீரானது மேற்கில் சுமார் 7 மைல் தூரம் பரவி கொளத்தூர் என்ற கிராமத்தை அடுத்து நிற்கிறது. கோடைகாலத்தில் தண்ணீர் சற்றுக் குறைவாக இருந்தாலும், மழைகாலங்களில் தண்ணீர் நிரம்பி இருக்கும். தண்ணீர் நிறைய இருந்தால் சுமார் 140 அடி இருக்கும். அணையின் மேல் ஒரு ரோட்டு உள்ளது. இதன் அகலம் 16 அடி. இதன் மேற்குப் பக்கத்தில் அணையின் தினசரித்தண்ணீர்அளவு, காற்றமுக்கம், முதலிய வற்றை அளவிடவும், மேட்டூர் அணையின் பலவிதமான புகைப்படங்களும் உள்ள ஒரு அழகான கட்டிடம் உண்டு. கிழக்குப்பக்கத்தில் ஒரு சிறு குன்றின்மேல் கவர்னர் தங்க ஒரு சிறு பங்களா உண்டு.

அணையின் கீழ்ப்புறத்தில் மின்சார உற்பத்திசெய்ய ஒரு பெரிய கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது. தேக்கத்திலிருந்து ஒரு பெரிய குழாய் மூலம் தண்ணீரைவிட்டுப் பரிசோதித்ததில் தண்ணீரானது வேகத்தினால் ஒரே புகையாக வந்ததாம். இதன் வேகத்தைக் கணக்கிடமுடியாது என்று கண்ட என்ஜினியர்கள் இதன் மூலம் மின்சாரம் உற்பத்திசெய்யலாம் என அறிந்தார்கள். பிறகு இக்கட்டிடத்தைக்கட்டினார்கள். அணையின் அடியில் 4 பெரிய குழாய்கள்மூலம் தண்ணீரைக்கொண்டுவந்து பெரிய பற்சக்கரங்களின்மீது விழும்படிசெய்து அதன்மூலம் மின்சாரம் தயார்செய்கிறார்கள். இதிலிருந்து உற்பத்தியாகும் மின்சாரத்தின் சக்தி 11,000 வோல்ட்டுகள் (Volts). இதை மறுபடியும் 66,000 வோல்ட்டுகளாகப் பெருக்கி இதர இடங்களுக்கு அனுப்புகிறார்கள். முதலைபோன்ற கொடிய ஜந்துக்களும், தூசுமுதலிய குப்பைகளும் குழாய்களினுள் வராமலிருக்க

குழாய்களின்வாயில் இரும்புச்சல்லடைகளால் மூடப்பட்டது. அணையின் அடியில் ஒரு சுரங்கம் உண்டு. இதன் அகலம் சுமார் 8 அடி. உயரம் சுமார் 8 அடி. வெளிப்பக்கத்திலிருந்து சுரங்கம் சுமார் 15 அடி இருக்கும். அணையின் நீளம் எவ்வளவோ அவ்வளவு நீளம் உள்ளது இச்சுரங்கம். சுரங்கத்தினுள் மின்சாரவசதி உண்டு. சுரங்கத்தினுள் அணையிலிருந்து கசியும் தண்ணீரை வடிகால்மூலமாக வெளியில் கொண்டுவருகிறார்கள். அணையின் தென்புறமாக ஒரு நேர்த்தியான பூந்தோட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பல அழகான பூஞ்செடிகளும், மரங்களும் உண்டு. இதைப்பார்க்கவும், அணையைப்பார்க்கவும் அனுமதிச்சீட்டுகள் பெறவேண்டும்.

மின்சார உற்பத்திசாலைக்கு வெளியில் தண்ணீரை 8 குழாய்கள் மூலம் வெளிவிடுகிறார்கள். குழாய்கள் சிலவற்றில் தான் தண்ணீர் விடுவார்கள். அணையில் 35 அடிக்குக்கீழ் தண்ணீர் குறைந்துவிட்டால் மின்சார உற்பத்தி செய்யும் யந்திரம் வேலைசெய்யாது. இக்குழாய்கள் மூலம் விடும் தண்ணீரினால் தஞ்சாவூர், திருச்சி முதலிய ஜில்லாக்களில் சுமார் 301,000 ஏகர் பயிராகிறது. இதுவன்றி அணையின் கிழக்குப் பக்கத்தில் 16 கண்கள் உள்ள ஒரு பாலம் உண்டு. அணையில் தண்ணீர் அதிகம் தேங்கினால் இதன்மூலம் தண்ணீரை வெளியேற்றி அணையைப் பாதுகாக்கிறார்கள்.

இவ்வணையினால் மழை இல்லாத வறண்டகாலங்களில் தண்ணீரைப் பெற்று நெல், கரும்பு, வாழை முதலிய நன்செய்ப்பயிர்கள் சாகுபடிசெய்யவும், மழை அதிகமாக உள்ளபோது தண்ணீரைக் குறைவாகவிடவும் சௌகரியம் ஏற்பட்டுள்ளது. அணை கட்டுவதற்குமுன் காவிரிநதியில் தண்ணீர் அதிகமாக வரும்போது எத்தனையோ பயிர்பச்சைகளும், ஊர்களும் அழிந்து போகும். இவ்வணையைக்கட்டியபிறகு தஞ்சாவூர், திருச்சி முதலிய ஜில்லாக்களில் நெல் மூன்று போகம் பயிர்செய்து ஜீவிப்பதல்லாமல், மேற்கூறிய ஆபத்தும் இல்லாமற்போயிற்று. இதன்மூலம் எடுக்கும் மின்சாரம் சென்னை மாகாணத்தில் பல இடங்களில் யந்திரங்கள் ஓட்டவும், வெளிச்சங்களுக்கும் உபயோகமாகிறது. இவ்வணையைக்கட்டியதால் காவிரி நதியின் போக்கையே மாற்றிவிட்டார்கள். இவ்வணையில் மீன்பிடித்தலைக் குத்தகைக்குவிடுவதால் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது. இம்மாபெரும் அணைக்குப்பிளான் அமைத்தவர் எல்லிஸ் என்னும் பெரியார்.

வட இந்தியாவில் சுக்கூர் அணையைப்போலவே, தென் இந்தியாவில் மேட்டூர் அணை பெரியது. ஆகவே இவ்வணையை ஒவ்வொருவரும் தவறாது பார்க்கவேண்டியது அவசியம் என்பது கூறாமலே விளங்கும்.

மறவர் மாண்பு

(கொத்து 37, மலர் 8, பக்கம் 149-ன் தொடர்ச்சி)

[வித்துவான், தே. நாதமுனி]

தலைப்பாகை கழன்றுபோய் விழுந்தது. இருண்டு சுருண்ட அவளது கூந்தல் பரந்துகிடந்தது கண்ட வீரன் கைவாளைக் கீழே எறிந்தான். சிறந்த வாள்வீரனாகிய தன்னை எதிர்த்து இவ்வளவு நேரம் போராடியது ஓர் பெண் என்பதைக் கண்ட அவன் வியப்பும் கவலையுங் கொண்டவனாய் ஒரு கணம் திகைத்து நின்றான். உலகம் உள்ளளவும் நீங்காத பெரும் பழிகாரனாகத் தான் ஆய்விட்டதை உணர்ந்த அவன் அவள் கால்களில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்டாலும் தன் பழி நீங்காதே என எண்ணினான். மறவர் குலத்திலே ஆணும் பெண்ணும் இரவும் பகலுமாய் இவ்வாறு மானமே பெரிதாய்க்கொண்டு உயிரைத் திரணமாய் மதித்து உழைப்பதை உன்னி உன்னி உள்ளம் பதை பதைத்தான். மயங்கி வீழ்ந்தவளைத் தொடவும் அவன் கைகள் நடுங்கின. பாவத்தின் எல்லையைக் கண்ட தனக்கு இப்பாவம் பெரிதல்ல என எண்ணி அவளைத் தூக்கி உட்காரவைத்து மயக்கம் தெளிவித்தான். உட்காரவும் முடியாத நிலையில் களைத்துப்போன அவளோ அவன் மடியிலேயே சாய்ந்தாள். உள்ளம் துடிக்க உணர்ச்சியற்ற மரக்கட்டைபோல் தாங்கிக்கொண்டிருந்தான் அவனும். சற்று மயக்கம் தெளிந்த அவளைப் பார்த்து "நீ யார்? இந்நேரத்திலே இங்கு வரக்காரணம் யாது?" என்றான். "நான் ஒரு மறவர் குலப் பெண்; என் நாட்டிற்காக என்னால் இயன்றதைச் செய்யப் புறப்பட்டேன்" என்றாள் கணீரென்ற குரலில். "இல்லை இல்லை. நீ எவராலும் சாதித்தற்கரிய ஒரு பெரிய செயலைச் செய்துமுடிக்கவேண்டும் என்னும் எண்ணத்தோடு வந்துளாய் என்பதையும் அது என்னுடைய சந்திப்பால் தடைபட்டுவிட்டது என்பதையும் கவலையும் ஏமாற்றமும் கலந்த உன் முகமே காட்டுகின்றது. என்னை அறியாது என் மனம் உனக்கு உதவவேண்டுமென எண்ணுகின்றது. ஆகையால் உண்மையை ஒளியாது உரைப்பாயாயின் உனக்கு வேண்டிய உதவியைச் செய்வேன்" என்றான். "சாதித்தற்கரியது என்று நீயே சொல்லுகின்றாய், ஆனால் அதற்கு உதவவும் முடியும் என்கிறாயே, அது எப்படி முடியும்?" என்றாள். "நீ யாரென்பதைச் சொன்னால் எப்படி முடியும் என்பதைச் சொல்லுகின்றேன்." "நான்தான் இளவரசி தாமரைச் செல்வி. பாசறையினுள் யாரும் அறியாது சென்று பாண்டியனைச் சந்திக்கவேண்டியதே என் வேலை. அதற்கு எப்படி உதவுவாய்?" "அப்படியா? நான் அவன் உயிர்த்தோழன். இதோ இம் மோதிரத்தைப்பார். இதிலே கயல் செதுக்கப்பட்டுளது அல்லவா? இதுதான் அவனுடைய அரசியல் முத்திரை மோதிரம். இதை கையில் அணிந்து கொண்டு என்னுடைய உடையையும் தரித்துக்கொண்டு நீ சென்றால் காவ

லாளிகள் அனைவரும் உன்னைக் கண்டதும் வணங்கி வழிவிடுவர். ஆனால் நான் இவற்றை உனக்குக் கொடுக்குமுன் நீ பாண்டியனை கண்டு யாது செய்யப் போகின்றாய் என்பதைக் கூறவேண்டும்" என்றான். "முட்களின் மத்தியிலே பூத்த ரோஜாப் போன்ற உத்தமனே நீ எனக்கு உதவினாலும் உதவாவிட்டாலும் என் உள்ளக்கருத்தை உரைப்பேன் கேள். மறவர்களனைவரும் போரிட்டு மடிந்தாலும் மடிவோம். மன்னனுக்கு மகள் கொடுப்பதில்லை என்னும் முடிவிற்கு வந்துவிட்டனர். நேற்று நடந்த போரிலே மாண்டவர் பலர். காயப்பட்டு கண்ணுறங்காது துன்புறுபவர் பலர். இவ்வளவும் என் பொருட்டாலல்லவா? மாறுவேடத்தோடு மன்னனைக் கண்டு போரிட்டு அவன் வாளுக்கு பலியாக என் ஒரு உயிரைக் கொடுத்து நாளை மடிய இருக்கும் மறவர்களனைவரையும் எனதருமை அண்ணனையும் காக்கும் கருத்துடையேன்" என்றனள்.

கேட்ட வீரனுடைய உடல் அச்சத்தால் நடுங்கிற்று. அதை வெளிக்காட்டாது உடையையும் மோதிரத்தையும் பெற்றுக்கொண்டு விரைந்து போகுமாறு கூறினான். அவளுக்கு மடியைவிட்டு எழ மனம் வரவில்லை. ஏதாவது பேசிக்கொண்டே இருந்தால் தேவலாம்போல் தோன்றிற்று. ஆனால் தனது கடமையை முடிக்கத் தவறினால் நாளை நேரிடும் பெரும் துன்பத்தை நினைத்தவளாய் சட்டென்று எழுந்து புறப்பட்டாள். பாசறையை அடைந்ததும் கீழ் இறங்கி மன்னனைப்போல் மமதையாக நடந்தாள். ஆம், அவளை யார் தடை செய்யமுடியும். கையிலே இருப்பது முத்திரை மோதிரமல்லவா? வெளிவாயிலிலே எதிர்பார்த்ததுபோலவே காவலாளிகள் கைதொழுது வழிவிட்டனர். உள் வாயிலை அடைந்ததும் "யார்?" என்றனர் காவலாளிகள் இருவரும். மோதிரத்தை காட்டினாள். ஒருவரை ஒருவர் பார்த்தனர். உடைவாளை உருவினர். "நட உள்ளே" என்று அதட்டினர். "மறவர்களில் உயிரோடு கைதியாக்கி சிறைப்பிடிக்கப்பட்ட முதல் கைதி நீதான்" என்று கூறி கதவடைத்தனர். (தொடரும்.)

எம் பாடசாலை நிகழ்ச்சிகள்

1. **மானேஜர் சுவாமி அவர்கட்கு வரவேற்பு** :—8-2-47 மாலை 2-30 மணிக்கு இப்பாடசாலை மானேஜரும், தலைமை ஆசிரியருமான சங். A. லூர்துசுவாமி, B.A., L.T., அவர்களை, இப்பாடசாலை ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள், ஹைஸ்கூல், மாடல் ஸ்கூல் மாணவர்கள் முதலியோர் இப்பாடசாலை சபாமண்டபத்தில் வெகு குதூகலத்துடன் வரவேற்று உபசாரப்பத்திரங்கள் வாசித்தும், ஆடல் பாடல், சம்பாஷணைகள், சிறு நாடகங்கள் முதலியவற்றை நிகழ்த்தியும் அன்னவரை

வாழ்த்தினர். இறுதியில் சங். மானேஜர் சுவாமியவர்கள் பலத்த கர கோஷங்களுக்கிடையே எழுந்து நம் பாடசாலையின் உயரிய இலட்சியங்களை விவரித்துக்கூறி, அரிய புத்திமதிகளைப் புகட்டி ஆசீர்வதித்தருளினர்.

2. Athletic Sports (பந்தய விளையாட்டுகள்) :—10-2-47 காலை 7-30 மணிக்கு பந்தய விளையாட்டுகள் ஆரம்பித்தன. இப் பந்தய விளையாட்டுகளில் சகல ஆசிரியரும், மாணவர்களும் முக்கிய பங்கெடுத்துத் தங்களது திறமைகளைக் காட்டினர். மேற்படி பந்தயங்களில் சிறந்து விளங்கினவர்கட்கு, மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலெக்டர் அவர்களால் பரிசுகள் வழங்கப்பட்டது. பெருவாரியான பந்தயங்களில் முதன்மையாக வெற்றி பெற்று, 19 மார்க்குகளை அடைந்த நம் நாடக கழக காரியதரிசி லூயிஸ் M. செல்வராஜுக்கு (Senior Champion) வெள்ளிப் பதக்கம் அளிக்கப்பட்டது. அத்தோடு ஜுனியர் பிரிவைச் சேர்ந்த எலிமெண்டரி கிரேடு C. தனராஜுக்கும் வெள்ளிப் பதக்கம் கொடுக்கப்பட்டது.

3. பரிசளிப்பும் நாடகமும் :—10-2-47, மாலை 5-30 மணிக்கு திருச்சி ஜில்லா கலெக்டர், T. A. வர்க்கீஸ் I. C. S. அவர்கள் தலைமையின்கீழ் நடைபெற்றன.

தலைமை ஆசிரியர் சங். A. லூர்துசுவாமி அவர்கள் சபாநாயகரை வரவேற்று, இப்பாடசாலைகளின் வருடாந்திர யதாஸ்தை வாசித்தளித்தனர். பின்னர் கல்வி நடத்தை போட்டிப் பந்தயங்கள் முதலியவற்றில் சிறந்து விளங்கினவர்கட்குப் பரிசுகளும், நற்சாட்சிப் பத்திரங்களும் கலெக்டர் அவர்களால் வழங்கப்பட்டது. பின் சபாநாயகர் இப்பாடசாலையின் மேன்மையைப்பற்றியும், தற்பொழுது இதன் உன்னத ஸ்தானத்தைப் பற்றியும் புகழ்ந்து இனிமையானதொரு சொற்பொழிவாற்றினர்.

பின்னர் மாணவர்களால் பலவித ஆடல் பாடல்கள், சிறு நடிப்புகள் முதலியன சிறந்த முறையில் நடித்துக் காண்பிக்கப்பட்டது. ஷேக்ஸ்பியரின் சிறு நடிப்பொன்றும், 'கிருஷ்ணஜீ' என்ற தமிழ் நாடகத்தின் சிறப்பான பகுதியொன்றும் அவ்வமயம் நடிக்கப்பட்டு விஜயஞ்செய்தோரின் மதிப்பைப் பெரிதும் பெற்றது. விசேஷமாக 'Round the world' என்ற சிறுவரின் காட்சிகளும், மனுநீதி சோழன் செங்கோலின் சிறப்பை விளக்கும் ஐயாக்கண்ணு என்ற ஆசிரிய மாணவரின் ஒப்பற்ற தனி நடிப்பும் யாவர் மனத்தையும் கவராமல் இருக்கமுடியாது.

இறுதியாக பாடசாலை கீதத்துடன் பாடசாலை வைபவம் இனிது முடிவெய்தியது.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

[V. S. Rajan]

[கொத்து 37, மலர் 8, பக்கம் 157-ன் தொடர்ச்சி.]

பற்களைப் பாதுகாக்கும் முறையும் உண்ணும் முறையும்

குழந்தை பிறந்த ஏழாவது அல்லது எட்டாவது மாதத்திலே பற்கள் முளைக்க ஆரம்பிக்கின்றன. இரண்டரை வயதுக்குள் 20 பற்கள் தோன்றி விடுகின்றன. இவைகள் நிலையில்லாப் பற்கள். குழந்தைக்கு ஏழு வயது ஆகும்போது நிலையான பற்கள் முளைக்கத் தொடங்குகின்றன. நிலையில்லாப் பற்களின் பின்னே நான்கு நிலையான பற்கள் தோன்றுகின்றன. பின்பு நிலையில்லாப் பற்கள் ஆட்டங்கொண்டு விழ நிலையான முன்னம் பற்கள் அவைகளின் இடத்தைப் பிடித்துக் கொள்ளுகின்றன. நிலையில்லாப் பற்கள் தோன்றும்போது அவைகளை சரியானபடி கவனிக்காததாலும் நல்ல சுத்தமான முறையில் வைத்துக்கொள்ளாததாலும்தான் நிலையுள்ள பற்கள் தோன்றும்போது பற்கள் விகாரமாயும் கோணலாகவும் இருக்கின்றன. நிலையான பற்கள் தோன்று முன்னமே நிலையில்லா பற்கள் கெட்டு விழுந்து விடுவதால் நிலையான பற்சள் முன்னுக்கும் பின்னுக்கும் நீட்டிக்கொண்டு தோன்றுகின்றன. கடைவாய்ப் பற்கள் நான்கும் பதினெட்டு அல்லது பத்தொன்பது வயதுக்குமுன் தோன்றுவதில்லை. ஆக 32 நிலையான பற்கள்.

உணவை கடித்து மெல்வதுதான் பற்களுக்கு ஏற்பட்ட வேலை. உணவை அரைத்து உமிழ் நீரோடு கலந்து ஜீரண வேலையை ஆரம்பிக்கிறது. அதோடு பற்கள் பேசுவதற்கும் உதவி செய்கின்றன. அவைகள் விழுந்து விட்டால் சில சொற்களை நன்ருய் உச்சரிக்க முடியாது. பற்கள் செய்யும் வேலை முக்கியமாய் இருக்கிறபடியாலும் அவைகளின் ஸ்திதி தேக ஆரோக்கியத்தோடு நெருங்கின சம்பந்தமுடையதாய் இருப்பதாலும் சில மரண பண்டு கம்பெனியார் தங்கள் கம்பெனிக்கு பணம் கட்டி வருகிறவர்களின் பற்களை இலவசமாய் கவனிக்கவும் சிகிச்சை செய்யவும் பல் வைத்தியர்களை வைத்திருக்கிருர்கள். ஏனெனில் கெட்டுப்போன பற்களால் உண்டாகிற நோய்க்கும் மரணத்திற்கும் கொடுக்க வேண்டிய பணத்தைக் காட்டிலும் இப்படி பல் வைத்தியனுக்கு கொடுக்கிற பணம் மிகக்கொஞ்சமாய் இருக்கிறது. நாம் உண்கிற உணவின் துணிக்கைகள் பற்களில் ஒட்டிக் கொண்டு அங்கேயே கெட்டுப்போகிறபடியால் பற்கள் அழிகின்றன. ஒரு பல் அழியத்தொடங்கினல் பக்கத்திலுள்ள பற்களும் சீக்கிரம் கெட்டுப் போகின்றன. இப்படி துணிக்கைகள் ஒட்டிக்கொண்டு இருப்பதால் நாளாக நாளாக எயிற்றுச்சதை யோரங்களில் கிருமிகள் உண்டாகின்றன. இப்படி எயிற்றின் இடையில் கிருமிகள் உண்டாவதால் எயிறு கழன்று போய் பற்களின் தூறுகளை வெளிக்குத் தெரியும்படிச் செய்கிறது. பின் பல்லுக்கும் எயிற்றுக்கும் இடையில் இடைவெளி அதிகப்படுகின்றது.

நாளடைவில் துர்க்கந்தமான சீழ் வடியும்படியாக கணக்கற்ற கிருமிகள் உண்டாகி குளிர்ச்சியான பொருளேயோ உஷ்ணமான பொருளேயோ சாப்பிடும்போது பல் நோகும்; பின் அவைகள் ஒன்றுக்கும் உதவாதபடி ஆட்டங்கொண்டு பிடுங்கி எறிய ஏதுவாகும்.

ஒவ்வொரு நாளும் பல்லை சுத்தம் பண்ணுத ஒருவன் பற்குச்சியால் பல்லை சுரண்டி மோந்து பார்த்தால் பற்களின்மேல் அழிபொருட்கள் இருக்கிறதென்பதையறிவான். கோடிக்கணக்கான கிருமிகள் பல்லினுள் இருக்கின்றன. இவைகள் உண்ணும் உணவின் மூலமாய் சென்று இரைப்பையையும் சிறு குடலையும் அடைக்கின்றன. இங்கே அவைகள் உணவைக் கெடுத்து அஜீரணத்தையும் மப்பையும் உண்டாக்குகின்றன. மேலும் பற்களில் உள்ள கிருமிகள் உள்நாக்கையும் மூக்கையும் காதுகளையும் நுரையீரல்களையும் அடைந்து நோய்களை உண்டாக்குகின்றன. ஒருவனுக்கு சொத்தைப் பற்கள் இருந்தால் உட்கொள்ளும் காற்று பல்லினுள் கெட்ட விஷக்காற்றுகளோடு நிறையக் கலந்து உள்ளே செல்லுகிறது. இந்த காற்று நுரையீரலில் சென்றதும் இங்கும் தீங்கு விளைவிப்பதோடு இரத்தத்தில் கலந்து சர்வாங்கத்திற்கும் கெடுதி விளைவிக்கின்றன. க்ஷயத்துக்கும் கணக்கில்லாத வியாதிகளுக்கும் பரிகாரம் செய்கையில் வைத்தியன் முதலில் நோயாளியின் பற்கள் செவ்வையாக இருக்கின்றனவா என்று சோதிப்பதே. ஆதலின் பற்களை ஒவ்வொரு நாளும் சுத்தமாக வைத்துக்கொள்ளுவதே முதல் கடமையாகும். குறைந்தவரையில் இரு தடவைகளில் சுத்தம் பண்ண வேண்டும். பற்களை சுத்தி செய்வதற்கு உப்பு மிக நல்ல பொருள். சுத்தி செய்வதற்கு எப்போதும் காய்ச்சின நீரை உபயோகிக்க வேண்டும். ஒரு பல் அழியத்தொடங்கினதும் உடனே பல் வைத்தியனிடத்தில் காட்ட வேண்டும். பெரிய பள்ளத்தை நிரப்புவதை காட்டிலும் சிறிய பள்ளம் நிரம்புவது செலவு குறைவு நோவும் குறைவு.

நாம் உண்ணும் உணவுகள் சத்துள்ளதும் தசையை வளர்க்கும் பொருளாகவும் இருக்கவேண்டும். உதாரணமாக அரிசி, பருப்பு, உருளைக்கிழங்கு, மற்றும் காய் கனிகள், கீரை வகைகள் உப்பைப்போல் கொஞ்சம் லோக பதார்த்தங்கள். எண்ணெய்களும் இப்படி கலந்து உண்ணு விட்டால் ஆரோக்கியமாய் இருக்கவேண்டியதற்குரிய சத்துசாரம் உடம்பிற்குக் கிடைக்காது. சர்வ ஞானமுள்ள இறைவன் மனிதனை சிருஷ்டித்தார். சிருஷ்டித்து மனிதனுக்கு தேவையான சகல உணவுகளையும் கூட சிருஷ்டித்தார். ஆதலின் நம் தேகத்தைப் பாதுகாக்க வேண்டிய சத்துள்ள பொருட்களை உண்பதேயாகும். பழங்களைப் போலவே முட்டையும் பாலும் மிகச்சிறந்தவையாம். மற்றெல்லா உணவுகளை காட்டிலும் மாமிசமே சிறந்த உணவென்று சிலர் எண்ணுகின்றனர். அமெரிக்கா தேசத்தில் உள்ள ஒரு அறிஞர் நன்ருய் பரிசீலனம் செய்திருக்கிருர். அதாவது ஒரு சேர் எடையுள்ள நிலக்கடலையில் ஐந்து சேர் எடையுள்ள மாமிசத்தைக் காட்டிலும் அதிக சாரம் இருக்கிறது.

நாம் உண்ணும் உணவு மாத்திரம் சுத்தமாய் இருந்தால் போதாது. அறை, சாப்பிடும் இடம், பாத்திரம் முதலியவைகளும் சுத்தமாய் இருத்தல் வேண்டும். உண்ணும்போது இனிய சம்பாஷணைகள் செய்து உண்ணலாம். மன சமாதானமாக உண்டால் உணவு உருசியாயும் எளிதில் ஜீரணமாகவும் ஏதுவாகிறது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னே பின்னே சாப்பிடக் கூடாது. இரவில் அதிகமாகச் சாப்பிடக்கூடாது. அப்படி சாப்பிடு வதினால் அஜீரணமும் குன்மமும் உண்டாகும். ஏக காலத்தில் பலவித உணவுகளை உண்பதாலும் ஜீரணக்கருவிகள் கெடுகின்றன. ஆதலின் நன்றாக பக்குவம் செய்யப்பட்டதும், எளிதில் ஜீரணிக்கக் கூடியதும், தேக புஷ்டி உண்டாக்கக் கூடியதும், இரத்த புஷ்டியை உண்டாக்கக்கூடியது மான உணவுகளை உண்பதால்தான் தேக ஆரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் கொண்டு வாழ முடியும்.

(தொடரும்)

நாடகக் கழகம்

[Louis M. Selvaraj, Secretary, R. C. T. S., Dramatic Association.]

நம் பாடசாலைக் கொண்டாட்டங்களில் முக்கிய பங்கெடுத்து, பலவித நடிப்புகளை வெகுத் திறமையுடன் நடித்துக் காண்பித்த கழக அங்கத்தினர் யாவர்க்கும் எனது நன்றி உரித்தாகுக. இந்நாடகக் கழகம் ஆரம்பமான திலிருந்து வெகு விமரிசையுடன் காரியாம்சங்களை இதுவரையில் நடத்தி, பள்ளிக்கூட அதிகாரிகளுடையவும், பொதுமக்களுடையவும் நன்மதிப்பைப் பெற்று வந்ததைப்போல் வருங்காலத்திலும் இக்கழகமானது குன்றிலிட்ட தீபம்போல் துலங்கவேண்டிய முயற்சிகளை அங்கத்தினர்கள் எடுப்பார் களாக. எம் கழக அங்கத்தினரில் பெரும்பாலோர் இப்பள்ளியை விட்டு நீங்குவதால் அவர்கள் எல்லோருக்கும் என் கடைசி வந்தனத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் தங்கள் தாய் பாடசாலையை மறவாது, அதன் விசேஷ கொண்டாட்டங்களுக்கு விஜயஞ் செய்து சிறப்பிக்குமாறுகேட்டுக்கொள்ளப்படுகிறது. இனி இக்காரியதரிசி பதவியை வகிப்போருக்கு, இக்கழகமானது செவ்வனே நடைபெற்று வர வேண்டிய உதவிகளைப் புரிந்து வருமாறு சகோதர ஜூனியர் மாணவர் அங்கத்தினர்களை மிக வினயமாகக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக இக்கழகமானது இனிதே நடைபெற்று வர உதவிய சங். தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள், மாணவர்கள், திருச்சி கத்தோலிக் இசைச் சங்க வாத்தியக் கோஷ்டியார், மற்றும் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

விளையாட்டுகள்

(M. A. AMIRTHANATHAN, R. C. H. School, Trichy.)

1. முதுகுக்கு முதுகு சேர்ந்து தொடல்

(Back to Back Tag.)

[கொத்து 37, மலர் 8, பக்கம் 158-ன் தொடர்ச்சி.]

வகுப்பில் உள்ள பிள்ளைகளை உயரத்திற்குத் தக்கபடி ஜோடி ஜோடியாய்ப் பிரித்து, அவர்களை முதுகுக்கு முதுகு நின்று கைகளைப் பின்னிக் கொள்ளச் செய்யவேண்டும். அவர்கள் ஆடக்கூடிய எல்லையை நான்கு பக்கங்களிலும் குறிப்பிடவேண்டும். ஆரம்பத்தில் ஆசிரியர் ஏதேனுமோர் ஜதையைத் தெரிந்தெடுத்து, ஏனைய ஜதைகளைத் தாக்கும்படி ஏவுவார். ஜதைகள் பக்கவாட்டத்தில் குதித்துக் குதித்து ஓடி தப்பிக்க முயலவேண்டும். தாக்கப்பட்ட ஜதை மற்றைய ஜதைகளைத் தாக்கவேண்டும். எந்த ஜதை குறிப்பிட்ட நேரத்திற்குள் மூன்று தடவைகள் அகப்படுமோ அந்த ஜதைக்கு சிறிய தண்டனை விதிக்கலாம்.

குறிப்பு :—

1. இந்த ஆட்டத்தை தொடர்ச்சியாக 10 நிமிஷத்திற்குமேல் ஆடுதல் உசிதமல்ல.

2. ஆரம்பத்திலும், மற்றைய சமயங்களிலும் எந்த ஜதை தாக்க வருகிறது என்பதை ஆசிரியர் தெரிவித்தல் நலம்.

3. ஜதைகள் விரும்புமாயின், முதுகுக்கு முதுகு படியும்படியாக, ஒருவர் தன் கூட்டாளியை சுமந்தும் செல்லலாம்.

4. ஜதைகள் மற்ற ஜதைகளை தாக்கும்பொழுதும், தாக்கப்படும் பொழுதும், முதுகுக்கு முதுகு சேர்ந்து ஓடல்வேண்டும்.

5. எல்லைக்கு வெளியில் செல்லும் ஜதைகள் தாக்கப்பட்டவர்களாய்க் கருதப்படுவார்கள்.

2. ஜோடியாய்த் தாக்குதல் (Couple Tag.)

முன் ஆட்டத்தில் போலவே, மாணவர்களை ஜோடி, ஜோடியாய்க் குறிப்பிட்ட எல்லைகளுக்குள் நிறுத்தவும். இந்த ஆட்டத்தில் ஜோடிகள் இணைபிரியாமல் இருக்கவேண்டுமேதவிர, மற்றப்படி முதுகுக்கு முதுகோ,

அல்லது எந்த விதமோ இருக்கவேண்டியதில்லை. உத்திரவு கொடுத்தவுடன், ஜதைகள் இணைபிரியாது, மற்றைய ஜதைகளைத் தாக்கவேண்டும். மற்றவைகள் முன் ஆட்டத்தைப்போல் நடைபெறவேண்டும்.

குறிப்பு :—இந்த ஆட்டத்தில், சில சமயங்களில், ஜதைகளை ஓடவும், நொண்டவும், குதித்து ஓடவும், குதிரை ஓட்டம் ஓடவும், இன்னும் பல விதமாக நடிக்கவும் செய்து, ஆட்டத்தில் ஆர்வத்தை உண்டுபண்ணலாம்.

3. வனதேவதையும், விறகு வெட்டியும் (The Woodcutter and the Goddess)—Story Play

[குழந்தைகளுக்கு கதைகள் கேட்பதில் ஆர்வம் அதிகம் இருப்பதால், அவர்களுக்கு கதைகளைக்கொண்டு ஆட்டங்களையும், அப்பியாசங்களையும் கற்பிக்கலாம்.]

கதை	நடிப்பு
ஓர் ஊரில் ஒரு விறகு வெட்டி இருந்தான். வழக்கம்போல் அவன் தன் கோடரியை தன் வலது தோளிலும், கட்டிச்சாத மூட்டையை தனது இடது கையிலும் சுமந்து நடந்தான்.	உபாத்தியாயர் கோடரியை வலது தோளிலும், கட்டிச்சாதமூட்டையை இடது கையிலும் எடுத்துச் செல்வதாக நடிக்கவும். தன்னைக்கண்டு பாவிக்க குழந்தைகளை ஏவுதல்.
அன்று அவன் புறப்பட நேரமானபடியால், விரைவில் காட்டை அடைய எண்ணி வேகமாக நடந்தும், சிறிது தூரம் ஓட்டமாகவும் சென்றான்.	உபாத்தியாயர் வேகமாய் நடந்தும், ஓடியும் காண்பித்து பிள்ளைகளை அவ்வாறு செய்யத்தூண்டல்.
செல்லுங்கால் பல சிற்றோடைகளும், முட்களுமிருந்ததால் அவைகளைத் தாவிச்சென்றான்.	தாண்டிக்காண்பித்து செய்யுமாறு கற்பித்தல்.
கைகள் அயர்ந்தமையால் கோடரியையும், கட்டிச்சாதத்தையும் மாற்றிக்கொண்டான்.	மாற்றும் அபினயம்.
மீண்டும் ராக்ஷசனைப்போல் நடந்தான்.	ராக்ஷச நடை.

21006.

கதை	நடிப்பு
ஓர் மரத்தடியில் பிள்ளையார்க் கோவிலைக்கண்டு நமஸ்காரம் செய்தான்.	நமஸ்காரம் பஸ்கிபோட்டு, செய்யச் சொல்லுதல்.
எழுந்து, நடந்து, கடைசியாய் ஆற்றங்கரை ஓரத்தில் காட்டிலிருந்த ஓர் மரத்தை அடைந்தான். கட்டிச்சாதத்தையும், கோடரியையும் கீழே வைத்தான்.	கீழே இறக்கிப்போடுதல்.
வன தேவதையை எண்ணி வேண்டினான். தலைதரையில்பட நமஸ்கரித்தான்.	கும்பிடும் நடிப்பு.
கோடரியை எடுத்து வலதுபக்கமாக அம்மரத்தை வெட்டினான்.	நமஸ்காரம் பஸ்கி.
பின் இடப்புறமாயும், தலைக்கு நேரே தாக்கியும் வெட்டினான்.	வலப்புறமாய் சாய்த்து வெட்டும் நடிப்பு.
கைதவறி கோடரி பக்கத்தில் ஆற்றில் விழுந்தது. விறகுவெட்டி வருந்தினான், துக்கித்தான்.	வலப்புறம், தலைக்குமேல் தூக்கி வெட்டும் அபிநயம் செய்தல்.
கைகளைப் பிசைந்தான். மார்பில் அறைந்துகொண்டான், பயன் இல்லை.	தகுந்த நடிப்பு.
உடனே தேவதையின் ஞாபகம் வந்தது. அம்மா! "வனதேவதை" **எனக்கு அருள்புரியவேண்டும். கோடரியை எனக்கு எடுத்துக் கொடுக்கவேண்டும். நான் ஏழை** என்று மன்றாடினான்.	குழந்தைகள் தடித்த எழுத்துக்கள் உள்ள பதங்களைச் சேர்ந்தாப்போல் பொருள்பட கூறும்படியும், தகுந்த அபிநயம் செய்யும்படியும் பார்க்கவேண்டும்.
தெய்வம் ஏழைக்கு இரங்காமலிருக்குமா? இல்லை. விரைந்து வந்தாள் வனதேவதை. **அப்பா! உனக்கு என்ன செய்யவேண்டும்?** என வினவினாள்.	வார்த்தைகள் அபிநயம் அவசியம்.

கதை	நடிப்பு
நடந்ததைக் கூறினான் விறகு வெட்டி. உடனே வனதேவதை ஆற்றில் மூழ்கி ஓர் தங்கக் கோடரியை எடுத்துவந்து, **பக்தா! இது உன்னுடையதா?** என்று வினவினாள்.	மூழ்குவதை நடித்தும் தடித்த எழுத்துக்கள் உள்ள பதங்களைச் சொல்லவும் செய்தல் நலம்.
இல்லை என தலை அசைத்தான் விறகுவெட்டி.	தலை அசைத்தல்.
மீண்டும் மூழ்கி, ஓர் வெள்ளிக் கோடரியைக் கொணர்ந்து, **இது உன்னுடையதோ?** என்று கேட்க,	மூழ்கும் செய்கை தலை ஆட்டும் செய்கை.
இதுவும் இல்லை என்றான். கடைசியாய் மூழ்கி, அவனுடைய இருப்புக் கோடரியைக் கொண்டுவந்து, இது உன்னுடையதுதானா? என்று கேட்டாள். ஆம். இது என்னுடையதே என்று பதில் கூறினான்.	விறகு வெட்டி முகமலர்ச்சியோடு நிற்கும் காக்ஷியை நடித்தல்.
பக்தனே! உன் எதார்த்த குணத்திற்கு உன்னை மெச்சினோம். நீ பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவன். ஆகையால், இந்தா, இந்த மூன்று கோடரிகளையும் நீயே வைத்துக்கொள், என மூன்றையும் விறகு வெட்டிக்குச் சமர்ப்பித்தாள்.	பதங்களும், தானம்செய்யும் நடிப்பும் காட்டல்.
விறகுவெட்டி சந்தோஷமாய் அவைகளைப் பெற்று, தன் விறகுகளுடனும், மூன்று கோடாரிகளுடனும் ஊர் திரும்பினான்.	விறகு சுமந்துவரும் நடிப்பு.

ஏழையின் கண்ணீர்

(தொடர்ச்சி)

[ஹென்றி]

3. பொறாமையின் ஜ்வாலை

மீனாவின் வீட்டில் டாக்டர் ஜெகதீஸனும், ரகுநாதனும் பிரவேசித்ததும் லீலாவும், பிரேம் குமாரும் விலகி டாக்டருக்கு வழிவிட்டனர். டாக்டர் மீனாவின் திரேகத்தை பரிசோதித்து ஹ்ருதய பலவீனமும், ரத்தமின்மையுமாயிருக்கிறபடியால் ஆரஞ்சு, ஓவல்டின், பால் முதலியவைகளை அதிகம் சேர்க்கும்படியும்; கவலைப்படுவதால் ஹ்ருதய ஓட்டம் உணர்ச்சியினால் பாதிக்கப்படுமாகையால் ஜாக்கிரதையாயிருக்கும்படியும் கூறிவிட்டு இரவு கொடுக்கும்படியாக சில விட்டமின் மாத்திரைகளைக் கொடுத்துவிட்டுப்போனார். டாக்டர் சென்றதும் மீனா பாலுவை மறுபடியும் 'லீலா—பிரேம்குமார்' விவாகத்தை நடத்திவைக்கும்படி வற்புறுத்தினாள். பாலு மீனாவிற்கு உறுதியாக வெள்ளிக்கு அடுத்தவெள்ளி விவாகமே நடத்திவிடுவது என கூறினார். லீலாவும், பிரேம்குமாரும் ஒருவரை ஒருவர் ஆழ்ந்த பிரேமையுடன் பார்த்துக் களித்தனர். பாலு, பிரேம்குமாரிடம் 100 ரூபாய்களைக் கொடுத்து தன் தங்கையை நன்கு கவனித்துக்கொள்ளும்படி கூறிவிட்டு மறுநாள் மூவரையும் தன் வீட்டிற்கே அழைத்துப்போய்விடுவதாகக் கூறினார். மீனா தன் மகனுக்கு தன் அண்ணன் மகளே மனைவியாக வாய்ப்பதைக்குறித்து ஆறுதலடைந்தாள். இந்த ஆறுதலே அவளுக்கு ஒரு புத்துயிரை அளித்தது.

மீனாவிடமும், ரகுவிடமும், பிரேம் குமாரிடமும் சொல்லிக்கொண்டு பாலுவும், லீலாவும் தங்கள் வீட்டிற்குப் புறப்பட்டனர். பிரேம்குமார் பிரியா மனத்துடன் லீலாவிற்கு விடை கொடுத்தனுப்பினான். இருவரும் சென்றபின் மீனா தன் இரு குமாரர்களையும் அழைத்து அருகில் உட்காரவைத்துக்கொண்டு, "குமார்! ரகு! நீங்களிருவரும் சகோதரர்கள். உங்களிடத்தில் உலகம் எதிர்பார்ப்பது ஒற்றுமையைத்தான்! நாளைக்கு மூவரையும் பாலு தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய் விடுவான். அது பிரேம் குமாரின் வீடுதான்! ஏழைகளாகிய நம் கண்ணீருக்காக பகவான் வழிகாட்டின மகிழ்வின் ஆலயம் அது! அங்கே நீ உன் தம்பியை உன் மகனைப்போல் ஆதரிக்கவேண்டும். லீலாவிற்கு நீ சொந்த அத்தை மகன்; ரகுவும் கூடத்தான்!—ஆனால் லீலா உன் மனைவி ரகுவின் அண்ணி. அண்ணிகளின் உள்ளம் உலகில் எப்பொழுதும் சுய நலம் வாய்த்ததாக இருப்பது இயற்கைதான்! அதை ஆதரித்து நீயும்

சுயநலத்தை பேண ஆரம்பித்தால் நானும், ரகுவும் தெருவில் நிற்கவேண்டி தான்வரும். அது உங்கள் வீடு. அதில் நாங்கள் வந்து இருப்பது......" என்று பேசிக்கொண்டு போவதைத்தடுத்து பிரேம் குமார், "அம்மா! நான் சின்ன பிள்ளையல்ல! லீலாவின் வீடு என் வீடு; என் வீடு உங்கள் வீடு இல்லையா? இதென்ன வித்தியாசமான பேச்சு! ரகு! என்றாவது உனக்கு விரோதமான பேச்சு பேசினதுண்டா?......தந்தையை இழந்த அவனுக்கு தந்தை நான்!......உலகிலுள்ள பெண்களைப்போல் லீலாவை யும் எண்ணவேண்டாம். அவள் குழந்தையல்ல!......உலக இயற்கை அவ ளிடமும் அமையலாம். ஆனால் நான் அதை தடுக்க பிரயத்தனப்படுவேன். ரகுவின் க்ஷேம வாழ்வையும், உங்கள் நீடிய வாழ்வையும் கருதுகிறேன். அதைப்பற்றி இப்பொழுதென்ன பேச்சு? ரகு டாக்டர் கொடுத்த மருந்தை கொண்டுவா!" என்றான். ரகு மாத்திரை சீசாவைக்கொண்டு வந்து அண்ணனிடம் நீட்டினான். பிரேம் குமாரின் கையில் கொடுக்க சீசாவை நீட்டிய ரகுவின் கையைப் பார்த்த மீனா சத்தமிட்டு "ரகு" என்றாள். ரகு தன் தாயைப் பார்த்தான்,

"உன் மோதிரம் எங்கே?"

"........................"

"ஏன் மௌனம்?... ..எங்கேயப்பா மோதிரம்?"

"நேஷனல் பாங்கில் வைத்திருக்கிறேன்."

"ஏன்?"

"இன்று டாக்டர் பீஸ் கொடுத்தால்தான் வருவேன் என்றார். அத னால் அவருக்குக் கொடுக்க 30 ரூபாய்க்கு வைத்தேன்."

மீனா கண்ணீர்விட்டாள். வறுமை! அவள் கண்ணீரைத் துடைத் துக்கொண்டே, "ரகு நீ போய் அதை திருப்பிக்கொண்டுவா. இந்தா பணம்" என்று 100 ரூபாய் நோட்டைக் கொடுத்தான் பிரேம்குமார். ரகு பணத்தை வாங்கிக்கொண்டு புறப்பட்டான். வாசற்படியைத் தாண் டும்போது மீனா "ரகு! டாக்டரிடம்போய் பிரேம் குமாருக்கு ஒரு டாக்டர் சேர்டிபிக்கேட் ஒரு மாதத்திற்கு வாங்கிக்கொண்டு வா! இல்லாவிட்டால் சம்பளப்பிடித்த லீவில் சேர்ந்துவிடும். நாளையுடன் அவனுக்கு லீவும் முடிகிறதே!" என்றாள். ரகு "சரியம்மா" என்றுவிட்டு நேரே நேஷ னல் பாங்கிற்குப்போனான், மணி மாலை 6 ஆகையால் பாங்கு பூட்டி இருக்கவே டாக்டர் ஜெகதீஸன் வீட்டிற்குப்போனான்.

ரகுநாதன் கதவை தட்டின சத்தங்கேட்டு வேலைக்காரி வெளியே வந்தாள். ரகுநாதன் "டாக்டர் எங்கே? அவரைப் பார்க்கவேண்டும்"

என்றான். வேலைக்காரி வெளியே போயிருப்பதாகவும் வர இரவு பத்து மணியாகும் என்றும் கூறவே திரும்பி புறப்பட எத்தனித்தான். இதற்குள் வீட்டிற்குள் இருந்த சாந்தி வெளியே வந்து "யார் அது" என்று எட்டிப் பார்த்து தான் இதயத்தில் பூஜிக்கின்ற காதலன் என அறிந்ததும் "உட்காருங்கள், சீக்கிரம் வந்துவிடுவார்" என்று அவனை உட்காரச் சொன்னாள். ரகுநாதன் அங்கிருந்த பெஞ்சியில் உட்கார்ந்தான். சாந்தி உள்ளே சென்றாள். ரகுநாதன் தனிமையில் இருந்தானாயினும் ஏனோ சாந்தியின் உருத்தோற்றம் அடிக்கடி அவன் மனத்திரையில் சுழன்றது. உள்ளே சென்ற சாந்தி ஒரு சௌந்தர தேவதைபோல் தன்னை அலங்கரித்துக்கொண்டு அங்கும் இங்கும் அலைந்தாள். சாந்தி இங்குமங்கும் அலைவதை அடிக்கடி காணும் சந்தர்ப்பம் ரகுவிற்கு நேர்ந்தது ஆச்சரியமல்ல! ஏனெனில் அம்மாதிரி காண என்றுதானே சாந்தியும் அலைந்தாள்! சாந்தியின் அழகு அவன் கண்ணில்பட்டு அவனை ஆகாயக்கோட்டைகட்டும்படி செய்தது!

சிறிது நேரத்தில் உள்ளே சென்று சாந்தி தன் வேலைக்காரியை கூப்பிட்டு ஏதோ ஒரு காரியத்தை அவள் காதில் மெல்ல சொன்னாள். வேலைக்காரி வெளியேபோனாள். வேலைக்காரி கண்ணுக்கு மறையும்தூரம் போன பின் சாந்தி தன் வேலைகளை கவனிக்க உள்ளே போனாள். டாக்டருக்காகக் காத்திருந்து அலுத்துப்போன ரகுநாதன் வெறுத்துப்போய் சாந்தியிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குப்போக எழுந்தான். மணி 7 அடித்தது. அச்சமயம் "ஹா! ஐயோ!... அப்பா... அம்மா..." என்ற அலறும் சப்தம் வீட்டினுள் கேட்கவே திடுக்கிட்ட ரகு "உள்ளே போகலாமா வேண்டாமா?" என மனத்தில் தர்க்கித்துக்கொண்டு இருந்தான். ஆயினும் கடைசியில் என்ன அபாயமோ என தீர்மானித்தவனாய் சப்தம் வந்த அறையை நோக்கி ஓடினான். அங்கே சாந்தி தரையில் படுத்துக்கொண்டு "அப்பா...ஐயையோ வலிக்கிறதே......சுவாமி" என்று அலறிக்கொண்டு இருந்ததைப்பார்த்து அப்படியே ஸ்தம்பித்துப்போய் நின்றான்.

* * * * *

வீட்டைவிட்டு வெளியேறிய வீணாம்பாள் நேரே தன் அண்ணனை சுந்தர் வீட்டிற்குப்போனாள். அங்கே சுந்தரும், அவர் மனைவி யோகம்பாளும், மகன் கோபிநாதனும் அப்பொழுதுதான் படுக்கைக்குச்சென்றனர். வீணாம்பாள் கதவைத்தட்டவே யோகம் கதவைத்திறந்தாள். வீணாவைக் கண்டதும் சுந்தர் திடுக்கிட்டார். "என்னம்மா சங்கதி?" என்றும் கேட்டார். வீணா 'ஓ' வென ஒப்பாரிவைக்க ஆரம்பித்துவிட்டாள். விஷயத்தை ஒருவாறு அறிந்துக்கொண்டு சுந்தரும், யோகமும் திடுக்கிட்டனர். கோபிக்கு லீலாவை மணம் செய்தால் அவர்களுடையசொத்து தங்களுக்கே சேரும் என்று கனவு கண்டுகொண்டிருந்தனர். இப்பொழுது ஒரு ஏழை ஆசிரியனுக்கு லீலாவை மணம் செய்துகொடுக்கப்போவதை அறிந்து இரு

வரும் துள்ளினர்கள். கோபியின் முகத்திலும் ஏமாற்றமும், கோபமும், ஆத்திரமும் துடித்துக்கொண்டிருந்தது.

"வீணு!...நாங்கள் என்ன ஏழையா?...இந்த மாடிவீடு இல்லையா?... கோபியும் அடுத்தவருடம் B. L. பாஸ் செய்துவிடுவான்....எனக்கு இப்பொழுதோ வரும்படி வந்தவண்ணமாகவே இருக்கிறது! "கண்ட்ரோல்" "ரேஷன்" "கருப்புக்கடை" (Black-Market) என்று வந்ததும் போதும் எனக்கு கேஸ்களுக்கு பஞ்சமில்லை வரும்படிக்கும் பஞ்சமில்லை!... இது போதாதா?...கேவலம் ஒரு ஆரம்பஆசிரியனுக்கு உன் மகள் மனைவியாவது எந்த விதத்தில் நியாயம்?...புதுசம்பளவிகிதம்கூட 35 ரூபாயில் தான் ஆரம்பிக்கிறது! அவனும் S. S. L. C. அவளும் S. S. L. C. இருக்கட்டும் இந்த கலியாணம் நடந்துவிடட்டும் நான் என் வக்கீல் பட்டத்தையே துறந்துவிடுகிறேன்" என்று வீருப்பாக பேசிக்கொண்டே போனர் சுந்தரம். ஆளுக்கொரு விதமாக கத்தி, கடைசியில் வீணு திருமணம் நடந்தால் போவதில்லை என்றும், சுந்தர் வீட்டிலேயே இருப்பது என்றும் தீர்மானமாயிற்று! கடைசியில் மணி 11 அடித்தது யாவரும் படுக்கைக்குச் சென்றனர். யாவரும் தூங்கிவிட்டதாக அவர்களுடைய 'குறட்டை' சப்தம் ரீங்காரம்செய்தது. மணி ஒன்று அடித்தது.

அந்த நடுநிசியில் எண்ணங்களான அலைகளால் கொந்தளித்துக்கொண்டிருந்தது கோபிநாதனின் ஹ்ருதயம். கடைசியில் அவன் ஓசையிடாமல் வீட்டைவிட்டு வெளியேறி வீதிவழியே நடந்துசென்ருன். அவன் முகம் குற்றவாளியின் முகம்போல் கருத்திருந்தது. சுற்றிலும் யாராவது தன்னை நோக்கி வருகிருர்களா? என பார்த்துக்கொண்டே பிரேம் குமாரின் வீட்டை அடைந்தான். சுற்றுமுற்றும் பார்த்தான். எங்கும் நிசப்தமே குடிகொண்டிருந்தது. பிரேம் குமாரின் வீட்டின் பின்பக்கமாக குதித்து தோட்டத்துப்பக்கம் போனன். வீட்டினுள் அமைதியாக இருந்தது. மனத்திற்குள்ளேயே "தொலையட்டும்" என்று கூறிக்கொண்டு தன் சட்டைபையிலிருந்து நெருப்புப்பெட்டியை எடுத்து கிழித்து அந்த கூரை வீட்டில் ஒரு ஓரத்தில் வைத்துவிட்டு ஒரே ஓட்டமாக தன் வீட்டிற்கு ஓடி வந்துவிட்டான். வீட்டிற்குள்புகுந்து மெத்தைக்குப்போய் அங்கிருந்து பிரேம்குமாரின் வீட்டுப்பக்கம் பார்த்தான். ஒரே செந் தீ மயமாகவும், ஐயோ!...தீ...தீ! என்ற கோரக்குரல்களும் அவன் மனச்சாட்சியை அறுத்தன!—மறுநிமிடம் "தொலையட்டும் சனியன்கள்...இந்த மாதிரி பிச்சைக்கார நாய்கள் வாழ்ந்தென்ன?...இறந்தென்ன?" என்று எண்ணி மனச்சாட்சிக்கு ஒரு சமாதிகட்டினன். அந்த பயங்கர இரவில் அந்த ஊருக்கே பிரேம்குமாரின் வீடு ஒரு நிலவுபோல் உதவிக்கொண்டிருந்தது. படுக்கையில் தூக்கமின்றி கோபி புரண்டுகொண்டு விடியற்காலையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்!

21006

(தொடரும்.)

Reg. No. M. 1534.

கல்விச் சுலோகங்கள்

[Henry Ayilappat]

[ஊர்வலமாக பெற்றோர் சங்கத்தின் பேரால் மாணவர்களை அழைத்துச்செல்கையில் கல்வி சம்மந்தமாக சொல்லுவதற்காக சில ஸ்லோகங்களைக் கீழே கொடுத்திருக்கிறேன். கல்வி சம்மந்தமாக அநேகமாக கோஷங்கள் ஏற்படக்காணோம். பீடி விளம்பரத்திற்குக்கூட "கோபாலா!"—என் ஸார்?—எங்கே போறே?—கடைக்குப் போறேன்!—என்ன வாங்க?—பீடி வாங்க!—என்ன பீடி?—"கிளாவர் பீடி" என்று கோஷமிடுவதைப் பார்த்திருப்பீர்கள். மாணவர்கள் ஊர்வலத்தில் இம்மாதிரி என்ன கோஷங்கள் ஏற்படுத்தியிருக்கிறீர்கள்?—ஒன்றுமில்லையா?— இதையாவது பாடுங்கள்!]

முன் வரிசையிலுள்ள இருவர்		மற்றவர்கள்
பெற்றோர்களே!	—	பாருங்கள்
பள்ளிக்கூடம்	—	வாருங்கள்
பாலர்களை	—	சேருங்கள்
பகுத்தறிவை	—	கோருங்கள்
கல்விச்சாலை	—	நாடுங்கள்
கல்வியறிவை	—	தேடுங்கள்
கனவேகமாய்	—	ஓடுங்கள்
கல்விகற்று	—	பாடுங்கள்
அறிவுணவை	—	ஊட்டுங்கள்
அறியாமையை	—	ஓட்டுங்கள்
ஆர்வத்தை	—	காட்டுங்கள்
அறிவை நிலை	—	நாட்டுங்கள்.

Editor and Publisher: Rev. Fr. A. Lourduswami, B. A., L. T.,
Headmaster, R. C. Secondary Training and High School.

Printed by Rev. Fr. A. Susai Regis
Supt., St. Joseph's Industrial School Press, Trichinopoly.
Q. H. No. Ty.—1, 13—3—1947.